


மகளிர் தின விழாவில்
முதல்வர் முனைவர் வே.இராதாகிருஷ்ணன்

KSR COLLEGE OF ARTS AND SCIENCE
I N D I A
Knowledge is Power

விடியல் மாத இதழ் (தனிச்சுற்றுக்கு மட்டும்)
வெளியீடு: தமிழ்த்துறை
கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு - 637 215, தமிழ்நாடு, இந்தியா.
fb : facebook.com/ksrcasthamizh.vidiyal
Blog : ksrcasthamizh.blogspot.in
Email : vidiyalmagazhine@gmail.com
Website : ksrcas.edu

விடியல்
vidiyal95March2017

# விடியல்

THE DAWN மாத இதழ்

பொழுது - 95
மார்ச் 2017




## உலகப் பெண்கள் தினம்

# விடியல்

The Dawn

இதழ்-95, மார்ச்-2017



**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**
கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**

**முனைவர் சி.ரா. சுரேஷ்**
தமிழ்த்துறைத்தலைவர்

**இணையாசிரியர்**

**திரு. செ. தங்கராஜ்**

**ஆசிரியர் குழு**

திரு .வீரா. முருகானந்தம்
முனைவர் த. கண்ணன்
திருமதி. சு. சாந்தி
திரு. ப. ராஜேஷ்
முனைவர் து. சரஸ்வதி
முனைவர் பா. ராஜேஷ்
முனைவர் கோ. இரவிச்சந்திரன்
முனைவர் ம. லோகேஷ்வரன்
திரு. மு. சதீஸ்குமார்
முனைவர் சு. முப்பிடாதி
முனைவர் ப. பிரதீபா
திரு. மு. சத்தியராஜ்


## தலையங்கம்

## மகளிர் நிலை

தற்சமயம் உலகம் முழுவதிலும் கொண்டாடப்படும் மகளிர் தினம், சர்வதேச மகளிர் தினமாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட நாள் மார்ச் 18, 1911. ஆகவே மகளிர் தினம் கொண்டாட ஆரம்பித்து இந்த வருடத்துடன் 106 வருடங்கள் முடிந்து விட்டன.

ஃபிரெஞ்சுப் புரட்சியின் போதே பெண்கள் தங்களுக்கும் ஆண்களுக்குச் சமமான சுதந்திரம், சம உரிமை, அரசனது ஆலோசனைக் குழுமங்களில் பிரதிநிதித்துவம் கேட்டுப் போராட்டத்தில் இறங்கினர். எட்டுமணி நேர வேலை, வேலைக்குத் தகுந்த கூலி, அரசியலில் வாக்குரிமை ஆகியவையும் அவர்களது புரட்சி செயல்பாட்டில் பட்டியலிடப்பட்டன.

1908 ஆம் ஆண்டு சுமார் 15,000 பெண்கள் தங்களுக்கு வேலைக்குத் தகுந்த சிறப்பான சம்பளம், குறைந்த நேரப் பணி மற்றும் வாக்குரிமை கேட்டு நியூயார்க் நகர வீதிகளில் வலம் வந்தனர். இந்நிகழ்ச்சி மகளிர் போராட்டம் என்பதைவிட சோஷியலிஸ்ட் கட்சியின் சார்பில் நடத்தப்பட்ட ஒரு நிகழ்வாகவே இருந்தது.


© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)



வெளியீடு:

**தமிழ்த்துறை**

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி**(தன்னாட்சி)
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu



All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publish

1913 ஆம் ஆண்டு வரை பிப்ரவரி மாத கடைசி ஞாயிறு தேசிய மகளிர் தினமாக அனுசரிக்கப்பட்டது.

1910 ஆண்டு கோபென்ஹேகன் நகரில் உழைக்கும் பெண்களின் மாநாடு நடைபெற்றது. அதில் ஜெர்மனி சோஷியல் டெமாக்ரடிக் கட்சியின் ‘மகளிர் அலுவலகத் தலைவராக இருந்த **க்ளாரா செட்கின்** (Clara Zetkin) ஒரு யோசனையை முன்வைத்தார். அதாவது ஒவ்வொரு வருடமும் மகளிர் தினம் உலகம் முழுவதும் ஒரே தினத்தில் அனுசரிக்கப்படவேண்டும்; அதில் பெண்கள் தங்கள் உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டும் என்பது அவரது யோசனை. 1913 ஆம் வருடம் முதல், மார்ச் 8 சர்வதேச மகளிர் தினமாக உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

வேத காலத்தில் பெண்கள் மொத்தப் படித்தவர்களாகவும், தங்கள் கணவன்மார்களுக்கு சரிசமமாக எல்லா விஷயத்திலும் மேன்மையாக வாழ்ந்து வந்ததாகவும் அறிஞர்கள் கூறுகின்றனர். கார்கி, மைத்ரேயி போன்ற பெண் அறிவாளிகளைப் பற்றி உபநிடதம், ரிக் வேதமும் பேசுகின்றன. ஆனால் பிற்காலத்தில் பெண்களின் நிலை சரியத் தொடங்கியது. வேற்றுமையில் ஒற்றுமை காணலாம் என்பதற்கு இந்திய நாட்டை உதாரணமாகச் சொல்வார்கள். பெண்களின் நிலையும் இந்தியாவில் முரண்பாடுகள் நிறைந்ததாக உள்ளது என்றே சொல்ல வேண்டும். ஒரு பெண் பிரதமர், ஒரு பெண் ஜனாதிபதி, ஒரு பெண் சபாநாயகர், பல பெண் முதலமைச்சர்கள், பெண் விளையாட்டு வீரர்கள், விண்வெளி வீராங்கனைகள் என்று உலகம் பெருமைப்பட சொல்லிக் கொண்டாலும் பெண்களின் நிலை சொல்லிக் கொள்ளும் அளவுக்கு வளமானதாக இல்லை.

பால்ய விவாகங்கள் நடந்து, பால்ய விதவைகளும் அதிகரித்துக் கொண்டே இருப்பார்கள். வரதட்சணைக் கொடுமைகள், மரியாதைக் கொலைகள் என்று எல்லாமே பெண்களின் வாழ்வைத்தான் சூறையாடும் மேற்கண்ட கொடுமைகளை வாய்மூடி பார்க்கிறது நம் சமூகம். பாலியல் கொடுமைகளுக்கு ஆளாகும் பெண்கள் பலர் சமுதாயத்தின் தீ நாக்குகளுக்குப் பயந்து கொண்டு தங்கள் துயரங்களை, அவமானங்களை வெளியில் சொல்லாமல் மறைத்து வைத்து மன அமைதியைத் தொலைத்துவிட்டு வாழ்ந்து வருகிறார்கள். ஆளும் நாற்காலியில் அமர்ந்திருப்பவர்களும், நீதி மன்றங்களும் வாய்மூடி மௌனம் காத்து வருவது வருந்தத்தக்கது. இந்நிலை விரைவில் மாறுமா...!

# உள்ளுறை

## மகளிர் தினம்

கவிதைகள்.................................. 04 – 22

முக்கிய தினங்கள்...................... 23 - 25

மகளிர் தினம் கட்டுரை.............. 26 - 27

2016-ன் பொது வார்த்தை......... 28 - 29

பொது அறிவு..................................29 - 34

# கவிதைகள்

## நட்பு

அன்பில் உயர்ந்தவளே
ஆணுக்கு இணையானவளே!
உன்னைப் போற்ற
ஒரு நாளொன்று போதாது!
அதனால் தான்
ஒவ்வொரு நாளும்
போற்றுகிறோம்...!
தாயின் உருவத்தில்
உனக்கு உருவம் பல
இருக்கலாம்...!
உணர்வுகளும் பல இருக்கலாம்...
இருந்த போதிலும்
உனது உரிமையை
நீ ஒருபோதும் விடவில்லை...
பெண் என்பவள்
ஆணின் வெற்றிக்கு
காரணமாகவும் இருக்கின்றாள்...!
அதே பெண்
அவனின் பயணத்தை
முடிக்கவும்
காரணமாக இருக்கிறாள்...!
இதில்

பெண் என்பவளால்
ஆக்கவும் முடிகிறது...!
அழிக்கவும் முடிகிறது....!
நீ காணாதது
எதுவும் இல்லை...!
இந்தக் கணம் நான் வணங்குகிறேன்
எனது பெண்மைப் பிறப்பையும்
பெண்ணாகப் படைத்த
எனது தாயையும்...!
நாம் பெண்ணாக
பிறந்து விட்டோம் என்று
சோர்வடையாதீர்கள்..!

உங்களது பலவீனத்தை
வீசிவிட்டு
பலத்தைக் கொண்டு வாருங்கள்
உங்களது வாழ்வில்...!
இனிமையும் பிறக்கும்...!
அதனுடன்
இன்பமும் பிறக்கும்....!

**வ.பாரதி**

**முதலாமாண்டு- இளங்கலைத் தமிழிலக்கியம்**

## மகளிர்கள்

மகளீர்களாகப் பிறந்து மக்கள்
மனதில் வாழ்ந்து மனித

வாழ்க்கைக்குத் தூண்களாக இருக்கும்
பெண்களே...! பெண்டீர்களே...! மகளீர்களே...!
மனிதனாக வாழ வைப்பது பெண்களே!
பெண்கள் இன்றி இவ்வுலகம்
நீரற்ற கடல்போல காட்சியளிக்கும்
பெண்கள் பூட்டுக்குச் சாவிபோல
அதனைத் திறப்பதற்கும் பூட்டுவதற்கும்
சாவியாக இருப்பது பெண்களே...!
பொருட்களை உபயோகிக்க சேதாரமாகும்
பெண்கள் நாட்டின் ஆதாரமே
பெண்களே நாட்டில் உயர்ந்தவர்கள்
பெண்களை மதிப்போம்...காப்போம்...!

**ஆர். மெய்யழகன்**

**முதலாமாண்டு- துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத்துறை**

அடக்கமாய் அமைதியாய்
படி கூடத் தாண்டாத நீ..
இன்று கடல் கடந்து
காணகம் கடந்து
காற்றைக் கிழித்து நிற்கும் உனை
விரும்பி நிற்கவா இல்லை
வியப்பில் நிற்கவா...!
விண்ணளவு நீ உயர்ந்தாலும்
உனக்கென அளவு போட்டு
மாறுவாய் எல்லா உறவாகவும்
இக்காலத்திலும் எக்காலத்திலும்
உன்னாலே உயரும் இத்தேசத்தில்

ஆண்மைக்கு இணையே உன் பெண்மை

போதுமே உன் புன்முறுவல்கள்

வேண்டுமே உன் புன்னகை

என்றும் என்றென்றும்...

**சி. சுப்ரியா**

**இரண்டாமாண்டு - கணிப்பொறி அறிவியல் துறை - சி பிரிவு**

## பெண்மை - அழகு

பெண்ணே!

எங்கே சென்றது உன் உரிமை

பெண்ணே!

எங்கே சென்றது உன் ஆசை

பெண்ணே!

எங்கே சென்றது உன் வலிமை

பெண்மை என்பது உலக அதிசயம்

உயிர் ஒன்றை உருவாக்கியது பெண்ணின் அதிசயம்

நீ காட்டும் பாசத்தின் அளவு கடலைப் போன்றது

என்றும் உன் பாசம் என்றும் அலை ஓய்வதேயில்லை

உயிர் கொடுத்தவர் கடவுள் என்பர் ஆனால்

அவ்வுயிரையும் உலகிற்கு காட்டியது பெண்மை என்னும் அழகு!

உயிரைப் பிடுங்கி மகிழ்ச்சி கொள்வது மரணம்

அவ்வுயிரையும் கொடுத்து அனைத்துள்ளத்தையும்

நெகிழ வைப்பது பெண்மை...நெஞ்சம் மறப்பதில்லை

என்பது உண்மை ஆனால், பாசம் என்பதை மறந்ததில்லை உள்

உள்ளம்

பாசம் என்பது வரம்; ஆனால் பெண்மை அதைக் காட்டிலும் சிறந்தது..

# பெண் சுதந்திரம்
# பெண்மை - அழகு

ஓர் உயிரைப் பிறந்திடச்
செய்பவள்,
சுதந்திரம் என ஒன்று
இருப்பதால் தானே
அதனைச் செய்கிறாள்...!!
ஓரிரு கைகளால் சமைப்பதும்
இரண்டு கால்களால் நடப்பதும்
கண்களால் பார்ப்பதும்
காதுகளால் கேட்பதும்
சுதந்திரம் என ஒன்று
இருப்பதால் தானே...
பிறகென்ன வேண்டும்
இறைவனின் படைப்பில்
அனைத்தையும் பெற்றுவிட்ட பிறகு?
வாக்குரிமை வேண்டுமென்றால்
அதையவள் பெற்றிட
வாயை யாரும்
கட்டிப்போட்டு இருப்பதில்லையே...!
சட்டங்கள் செய்வதும்
பட்டங்கள் பெறுவதும்
அவரவர் பாடு,
அதற்கு,
சுதந்திரமில்லை என்பது எப்படிப் பொருந்தும்...?
வீட்டை விட்டு வெளியேற

வேண்டுமாயின்
அதற்குத் தடைபோடுவது
யார்?
சிலர் சொல்லும் விடையோ
பெற்றோர் என்பது...
இது எந்த வகையில் பொருந்தும்?
சந்தேகம் கொள்வது அவர்கள் என்றால்,
அந்த சந்தேகத்தை உருவாக்கியது யார்?
அவரவர் பாதையில் அவரவர் செயல்பட
என்ன செய்வதென்றே தெரியவில்லை...
அதனால் தானோ என்னவோ,
சுதந்திரம் என்பதைப்
பழிக்கிடா ஆக்கிறார்கள்...!
ஒத்துக் கொள்கிறேன் நானும்
பலாத்காரம் என்பதால்
சுதந்திரம் எனும் ஒன்று
பறி போவதை...
ஆனால் அவை
ஏற்படுவதற்குக் காரணம்
இதே சுதந்திரம் தானே,
பிறகெதற்கு இன்னும்
சுதந்திரம் வேண்டும்
என்று முழங்க வேண்டும்...!

**பா. பிரியதர்ஷினி**
**மூன்றாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

# அன்பும் உறவும்

அம்மாவின் அன்பு
தம்பி வரும் வரை
தந்தையின் அன்பு
வேலையில் சேரும் வரை
தங்கையின் அன்பு
தாவணி போடும் வரை
அக்காவின் அன்பு
அடுத்த வீடு புகும் வரை
அண்ணனின் அன்பு
அண்ணி வரும் வரை
தம்பியின் அன்பு
பத்தாம் வகுப்பு வரை
ஆசிரியரின் அன்பு
படித்து முடிக்கும் வரை
உறவினர் அன்பு
பணம் உள்ளவரை
நண்பனின் அன்பு
உயிரோடு இருக்கும் வரை...!
இளைப்பாறத் தாய்மடி இருப்பதால்
களைப்புத் தெரியவில்லை
தந்தையின் மந்திரச்சொல் இருப்பதால்
குழப்பமே நேர்ந்ததில்லை
இனிமையான நட்பு கிடைத்தால்
கண்களில் கண்ணீரே வருவதில்லை...

**கு. ரஞ்சித்குமார்**

**இரண்டாமாண்டு- கணிப்பொறி அறிவியல் துறை-சி பிரிவு**

நட்பு என்பது

ஒரு புத்தகம்

எத்தனையோ பக்கங்கள் இருந்தாலும்

அதைப்படித்தவர்களோ சிலர்

அறியாதவர்களோ பலர்...

முகத்தைப்பார்த்து

வந்த நட்பை விட

மனதைப் பார்த்து

வந்த நட்பே

வலிமையானது....

அன்பையும்,

வலிமையையும் இதயமாக்கி

கனவையும்

நினைவையும் நாணயமாக்கி...

சுண்டு விரலால் சுண்டிப்பார்க்கிறது

நாணயத்தைப் போல நட்பு

என்னும் வேதம்...

கனவையும் நிஜத்தையும்

கிள்ளிப் பார்க்கிறேன்

நட்பு என்பது

உண்மையா? இல்லை பொய்யா? என்று

கனவிலும் நிஜத்திலும்

கிடைக்காத அன்பு...

மனதிலும் என்றும்

நிறைந்த அன்பு...

உறவுகளிலும் பாசத்திலும்

கிடைக்காத அன்பு...

என்றென்றும் நிலைத்து

நிற்கும் அன்பு...

இதற்கு வடிவல் இல்லை

அடையாளம் இல்லை

உயரம் இல்லை

சொல்ல வார்த்தைகள் இல்லை

அதனால் தான்

கவிதையாக எழுதினேன்

ஒரு எழுத்தில் அல்ல

மூன்று எழுத்தில்

நட்பு என்று...

**மு. உமாராணி**

**முதலாமாண்டு - இளங்கலைத்தமிழிலக்கியம்**

## பெண்ணின் பெருமை

ஆணின் அகங்காரம்

பெண்ணின் பொறுமையால் வருவது...!

ஆனால்,

பெண்ணின் வெற்றியோ ஆண் தோற்பதால் அல்ல...!

அவள் தோல்வியை சந்தித்து,

சிந்திப்பதால் வந்தது.

இந்த உலகில் உள்ள ஆண்கள் அனைவருக்கும்

வெற்றி பெற பெண்கள் துணையாக உள்ளது...!

ஆனால்,

ஆண்களே எப்போதும்

பெண்களின் அடிமைத்தனத்திற்குக் காரணமாகின்றனர்..!

ஆண்கள் எப்போது பெண்களை சுதந்திரமாக

தங்களின் முடிவுகளை எடுக்கவிடுகின்றார்களோ

அப்போதுதான் பெண்களுக்கு கிடைக்கும் முழுச் சுதந்திரம்...!

**பி. காயத்ரி**

**இரண்டாமாண்டு- கணிப்பொறி அறிவியல் துறை-சி பிரிவு**

## பெண்

அழகில்லாமல் பிறந்தால் கூட திருஷ்டி

பொட்டு வைப்பவள் எழமுடியாமல் கிடந்தால் கூட

உடலைச் சுத்தம் செய்வாள்

கரு சுமந்த பெண்களெல்லாம் கண் கண்ட தெய்வம்

என்று உணர்கிறேன் வாழ்க்கை பெண்

எனும் உயிரில் சுவாசிப்பதால்...

**எம்.மதன்குமார்**

**முதலாமாண்டு- துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத்துறை**

அடர்ந்த இருளின் நந்த வனத்தில்

படர்ந்த அன்பின் தொப்புள் கொடியே...

உறங்கா விழிகளில் உறையா

கனவுகள் கண்ணீர் துடைக்குது

உலகின் கைகள் இன்று பெண்மை

போற்றும் திருவிழா ஆணின்

கண்ணீர் கண்ணீரின் பெருவிழா...!

**ரா. ராஜசேகர்**

**முதலாமாண்டு - துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத் துறை**

# பெண்மையின் மகத்துவம்

தாயாக வந்து தீந்தமிழ் தாலாட்டு
பாடிய தீர்க்க தரிசியே
உம்மை பெற்றதால் இந்த பூமியானது
மேண்மையாக மகத்துவம் அடைகின்றது...
ஆனால், இந்தக் கலியுக அரக்க பிரதிநிதிகளோ
உம்மை வீட்டறையில் கிடக்கச் சொல்கிறார்கள்...!
பெண்ணே நீ உரக்கச் சொல் - நான்
பூட்டி வைப்பதற்கு பூனையல்ல பூகம்பமென்று
போரில் தன் சிறுமகன் காட்டிய புறமுதுகுக்காக
தன் திருமார்பை வெட்டியெறிந்த
வீரத்தாயனவளின் வீர வம்சமே - உம்மை
இந்த எளியேனால் இயன்ற தமிழால்
கவிபாடவில்லை துதிபாடுகின்றேன்...
தாய்குலமே உமக்கு எந்தன் வீர வணக்கம்..

**கே. தங்கபாலாஜி**
**இரண்டாமாண்டு - கணிப்பொறி அறிவியல் துறை - சி பிரிவு**

பெண்ணின் பெருமை கூற
வார்த்தைகள் இல்லையம்மா...
பிறப்பு முதல் இறப்பு வரையில்
ஒரு தாயாகவும் வீட்டை
காப்பாற்றுபவள்...
அனைத்து உறவுகளையும்
சுமையாகக் கருதாமல்
பூபோல் மலரச் செய்கின்றவள்..

எல்லாத் துறைகளிலும்
முதன்மையாகத் திகழ்பவள்
இறக்கம், அன்பு, பாசம், நேசம்
மகிழ்ச்சி என அனைத்திற்கும்
உருவம் கொடுப்பவள் இவளே..

**ம. கிருஷ்ணமூர்த்தி**

**இரண்டாமாண்டு - கணிப்பொறி அறிவியல் துறை - சி பிரிவு**

## சமர்ப்பணம்

கருதனில் மங்கையராய்ப் பிறந்து
வயிற்றில் குழந்தைகளைச் சுமந்து
மார்பில் கணவனைத் தாலாட்டி
முதுகினில் குடும்பச் சுமைகளைத் தாங்கும்
மங்கையர்க்கு மகளிர் தினம்
ஓர் இனிய சமர்ப்பணம்....!

**பொ. பிரகாஷ்**

**இரண்டாமாண்டு - கணிப்பொறி அறிவியல் துறை - சி பிரிவு**

## அம்மா

அனைத்தையும் மறந்து
அன்னை மடியில்
தூங்கிய குழந்தை
பருவம் நாம்
வாழ்ந்த சொர்க்க
காலங்கள்......
முகத்தை காணும்
முன்னே உன்னை

நேசிக்கத் தெரிந்தவள்
உன் தாய் மட்டுமே......
ஆடம்பரமாய் கட்டித்தந்த
வீட்டை விட,
உன் சேலையில்
கட்டித்தந்த
வீடு தான்
ஆனந்தத்தை
தந்தது அம்மா......

படுத்துக் கொண்டே சொர்க்கத்தை காணலாம்
தலையணையில் அல்ல
தாயின் மடியில்......
அம்மா என்ற உறவு
இல்லா விட்டால்
இந்த உலகமும் அனாதை தான்......

மூத்த குழந்தை
பெண்ணாக இருந்தால்......
இளைய குழந்தைக்கு
இறைவன் அளித்த
இன்னொரு தாய்
தான் அக்கா.......

**அ.பிரதீபா**
**முதலாமண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

## மகளின் அன்பு..........அம்மா

கண்ணம் சிவக்க முத்தமிட்டு
கால் கழுவி விட்டு
கைப்பிடித்து பள்ளிக்கு நடத்திச் சென்றுள்ளேன்
கால்களை தோளில் போட்டு
கதை சொல்லி, தலை வாரி, பேன் எடுத்துள்ளேன்.
என் மடி அவளுக்கு இருக்கை
என் நெஞ்சு அவளின் படுக்கை
என் கைகளே அவள் முகத்துக்கு மெத்தை
அப்பாவுடன் தான் தூங்குவேன் என அவள்
அடம் பிடிக்க..... அவள் தூங்கிய பின் நான் தூங்க......
இப்படி சென்ற வாழ்க்கையில்
இயற்கை செய்தது மாற்றம்
பெரிய மனுஷி ஆகிவிட்டாள்
முகத்தில் முகம் முட்டி
மழலை பேசியவள்.

## மகளின் அன்பு..........அப்பா

வெளியில் செல்லும் போது
அவள் கை பிடித்து நடக்கிறேன்
மற்றவர்கள் பார்க்க கை தானாக பிரிகிறது
ஏற்று கொள்ள மறுத்த மனம்
துடி துடித்து துவண்டு போகிறது
அவள் குழந்தையாகவே இருந்திருக்கலாமோ
படிப்பு படிப்பு படிப்பு என
பறந்து போகிறாள் கல்லூரிக்கு
பார்த்து மகிழ்கிறேன் நான்

கல்லூரியில் நடந்ததை சொல்வாள் என
மாலையில் காத்திருக்கும் வேளையில்
ஆஸ் யூஷிவல் அப்பா....... தூக்கம் வருது!
அம்மாவிடம் அதிகம் பேசுவதில்லை
அண்ணாவிடம் அறவே இல்லை
அப்பாவான நான் பித்தனாக நிற்கிறேன்
அவளுக்கு வயது 19 எனக்கு 48
காத்திருப்பேன் மகளே இன்னும் சில ஆண்டுகள்
உன் மகள் என் குறை தீர்ப்பாள் என்று.......

**அ. ஹரிஹரன், கே. ரஞ்சித் குமார்**
**இரண்டாமாண்டு கணினி அறிவியல்**

## அன்னை

இறைக்கே இணையாகி வானிற்கு நிகராகி
பேரன்பிற்கு இலக்கணமானவள் இவள்
இரு ஐந்திங்கள் வலி தாங்கி
மறுபிறவி கையில் ஏந்தி ஓர்
உயிரை ஈன்றெடுக்கும் சுமை தாங்கி இவள்
பெற்ற பிள்ளைக்குப் பெயர்ச்சூட்டி
தாலாட்டி சோறூட்டி முடிசூட்டப் போராடும்
மணிமகுடம் அணியா அரசி அவள்
ஆம் அவள் தான் நம் அன்னை.
அழுக்கு தேகம், கலைந்த கூந்தல்
கிழிந்த சேலையிலும் கடவுளாக
தோன்றுகிறாய் என் அன்னை.......

கருவறையில் அலங்காரம் செய்த

சிலையை விட பலரது இடத்தை
தாயால் வகிக்க முடியும்.......
ஆனால் தாயின் இடத்தை
யாராலும் வகிக்க முடியாது!!!

**கு.கோகுலகிருஷ்ணன்**
**இரண்டாமாண்டு கணினி அறிவியல் சி பிரிவு**

## தாய்மை

பெண்மை என்பது மென்மை
பறவையின் இறகு கூட
தோற்கும்
தாயின் வருடலில்......

பெண்மை என்பது உண்மை
பொய்யான பாசங்கள் கூட
தோற்கும்
தாயின் உண்மையான
அன்பில்........
பெண்மை என்பது கருணை
கடவுள் கூட தோற்று போவான்
தாயின் கருணையில்
பெண்மை என்பது
பெருந்தன்மை
தெய்வம் கூட
மன்னிக்க மறுக்கும் தவறுகளை
தாய்மை மன்னிக்கும்

**சீ.மோகன் பாபு**
**இரண்டாமாண்டு கணினி அறிவியல் சி பிரிவு**

# அம்மா

அம்மா
நான் பிறந்து விழுந்த போது
உன் சேலை தான் ஈரமானது
நான் உறங்க உன் சேலைதான்
ஊஞ்சல் ஆனது
பால் அருந்தும் போது
உதட்டினை துடைத்தது உன் சேலைதான்
நான் மழையில் நனையாமல் இருக்க
உன் சேலை தான் குடையானது
நீச்சல் பழக என் இடுப்பில் கட்டியதும்
உன் சேலை தான்..
மழையில் நனைந்து என் தலையை துவட்டியதும் உன் சேலை தான்
மாம்பழம் தின்று என் கை
துடைத்ததும் உன் சேலை தான்
ஆசிரியரின் மிரட்டலுக்கு
ஓடி ஒளிந்ததும் உன் சேலை தான்
அப்பா அடிக்க வரும் போது
என்னை ஒளித்து வைத்ததும்
உன் சேலை தான்
அண்ணனுக்கு தெரியாமல்
மறைத்து வைத்து
மிட்டாய் கொடுத்ததும்
உன் சேலை தான்
காசு எடுத்தால் என்னை
கட்டி வைத்து அடித்ததும்
உன் சேலை தான்

தலை வலிக்கு ஒத்தடம்
கொடுத்ததும்
உன் சேலை தான் அம்மா.....
அம்மா உன் சேலையை
தொட்டுப் பார்க்கிறேன்
தொலைந்த இன்பத்தை
உன் கண்ணில் பார்க்கிறேன்
மறு பிறவியிலும்
நீயே வேண்டுமென்று
இறைவனிடம் கேட்கிறேன்
அம்மாவாக.......

**எம்.ஹபீப்ரகுமான்**
**முதலாமாண்டு ஆடை வடிவமைப்புத்துறை**

## பெண்கள் நிலை

உன் கருவின் கதகதப்பில்
உயிர் கொண்டேன்
எனைப் படைத்த
கடவுள் நீ !

எனக்கு பாலூட்டு
சீராட்டி வளர்த்தாய்
என் தாய் நீ !

என்னோடு
மண்ணில் விளையாடி
அன்பை வளர்த்தாய்
என் சகோதரி நீ !

பதின் பருவ
ஹார்மோனால்
பட்டாம் பூச்சி பறந்த போது
எனக்கு தேவதை நீ !

கல்யாண பந்தத்தில்
வாழ்வோடு கைகோர்த்த
மனைவி நீ !

என் சகியின்
மணி வயிற்றில்
மலர்ந்து சிரித்த போது
எனக்கு தெய்வத் திருமகள் நீ !

சருமம் சருகாகி
உதிரும் இலையான
எனை மடியில் சுமக்கும் போது
மீண்டும் தாயே நீ !
மானுட தேர் ஓட
மறுக்க முடியாத
மலர்ந்த சக்தியே
அச்சாணியே……..
பெண் தான் நீ !

**ஜீ.சஞ்சிவ்**
**முதலாமாண்டு ஆடை வடிவமைப்புத்துறை**

# முக்கிய தினங்கள்

**சனவரி**

- 12- தேசிய இளைஞர் தினம்
- 15- இராணுவ தினம்
- 26- இந்திய குடியரசு தினம்
- 26- இலக சுங்க தினம்
- 30- உலக தொழுநோய் ஒழிப்பு தினம்
- 30- தியாகிகள் தினம்

**பிப்ரவரி**

- 14- உலக காதலர் தினம்
- 25- உலக காசநோய் தினம்
- 28- தேசிய அறிவியல் தினம்

**மார்ச்**

- 08- உலக பெண்கள் தினம்
- 15- உலக நுகர்வோர் தினம்
- 20- உலக ஊனமுற்றோர் தினம்
- 21- உலக வன தினம்
- 23- வானிலை ஆய்வு தினம் மற்றும் புத்தக மற்றும் பதிப்புரிமை தினம்

**ஏப்ரல்**

- 05- உலக கடல் தினம்
- 05- தேசிய கடற்படை தினம்
- 07- உலக சுகாதார தினம்

- 22- உலக பூமி தினம்
- 30- உலக குழந்தைத் தொழிலாளர் தினம்

**மே**

- 01- உலக தொழிலாளர் தினம்
- 08- உலக செஞ்சிலுவை தினம்
- 11- தேசிய தொழில்நுட்ப தினம்
- 14- அன்னையர் தினம்
- 15- உலக குடும்ப தினம்
- 29- உலக தம்பதியார் தினம்
- 31- உலக புகையிலை மறுப்பு தினம்

**ஜீன்**

- 04- இளம் குழந்தைகள் தினம்
- 05- சுற்றுப்புற தினம்
- 18- தந்தையர் தினம்
- 26- உலக போதை ஒழிப்பு தினம்
- 28- ஏழைகள் தினம்

**ஜீலை**

- 01- மருத்துவர் தினம்
- 11- மக்கள் தொகை தினம்

**ஆகஸ்ட்**

- 01- தாய்ப்பால் தினம்
- 03- நண்பர்கள் தினம்
- 09- வெள்ளையனே வெளியேறு தினம்
- 29- தேசிய விளையாட்டு தினம்

**செப்டம்பர்**

- 05- ஆசிரியர் தினம்
- 08- எழுத்தறிவு தினம்
- 26- ஊமை மற்றும் காதுகேளாதவர் தினம்
- 27- உலக சுற்றுலா தினம்

**அக்டோபர்**

- 01- உலக முதியோர் தினம்
- 04- உலக விலங்குகள் தினம்
- 08- இந்திய விமானப்படை தினம்
- 30- உலக சிந்தனை தினம்

**நவம்பர்**

- 14- குழந்தைகள் தினம்
- 18- மன நோயாளிகள் தினம்
- 26- உலக சட்ட தினம்

**டிசம்பர்**

- 01- உலக எய்ட்ஸ் தினம்
- 10- மனித உரிமைகள் தினம்
- 14- உலக ஆற்றல் தினம்
- 23- உலக விவசாயிகள் தினம்

**தொகுப்பு**

**முனைவர் கோ. இரவிச்சந்திரன்**

**உதவிபேராசிரியர், தமிழ்த்துறை**

# கட்டுரைகள்

## மகளிர் தினக் கட்டுரை

மார்ச் 8-ஆம் நாள் உலக மகளிர் தினமாகக் கொண்டாடி வருகிறோம். வீட்டிற்குள்ளே இருந்த பெண்சமுதாயம் தற்போது வானில் பறந்து கொண்டிருக்கிறது என்றால் அதற்கு வித்திட்ட பல்வேறு போராட்டங்களின் வெற்றி தினமே இந்த மகளிர் தினமாகும். பெண் என்பவள் சக்தியின் அம்சம். உலகின் இயக்கத்திற்குத் தேவையான சக்தியை அளிக்கும் சர்வ வல்லமை படைத்தவள். 106-ஆவது மகளிர் தினம் கொண்டாட உள்ள இந்நிலையில் மங்கையரின் சக்தியைத் தெரிந்து கொள்வோம்.

**சாதனைப் பெண்மணிகள்**

அறிவை வளர்க்கும் புனித இடமான கல்விக் கூடகங்களில் பெரும்பான்மையினர் பெண்கள்தான். ஏனெனில் அவர்களுக்குத்தான் பொறுமை அதிகம் என்று கல்வி நிறுவனத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு வெற்றியும் பெறுகின்றனர். செவிலியர்கள், மருத்துவர்கள் விமானப் பணிப்பெண்கள் இப்படி அநேக இடங்களில் சிரித்த முகத்துடன் வலம் வந்து கொண்டிருப்பவர்கள் நம் பெண்மணிகள் தான்.

**மடக்கும் பெண்மணிகள்**

ரகசியமாகக் குரலைத் தாழ்த்தி கிசுகிசுப்பது முதல் மற்றவர்களின் கவனத்தைக் கவர உச்சத்தில் பேசுவதிலாகட்டும் இவர்களுக்கு நிகரில்லை. ஒரே கேள்வியைப் பலவிதக் கோணத்தில் அலுக்காமல் கேட்டு உண்மையை அறியும் வல்லமை இவர்களுக்கே உண்டு.

**கிரகிக்கும் தன்மை அதிகம்**

பெண்கள் அதீத பார்வைத்திறன் கொண்டவர்கள். எந்த ஒரு கூட்டமான இடத்துக்குச் சென்றாலும் தெரிந்தவர் தலை இவர்களது கண்களுக்குச் சிக்கிவிடும். அதேபோல் கூர்மையான, கவனிக்கும் தன்மை கொண்டவர்கள். பின்னர் நடக்கும் சம்பவங்களை முன் கூட்டியே ஆராய்ந்து உணரும் தன்மை மிக்கவர்கள் பெண்கள்.

**கற்பூர புத்தி**

எதையும் சட்டென்று புரிந்து கொள்ளும் கற்பூரபுத்தி பெண்களுக்கு மட்டுமே உண்டு என்பது கண்கூடான உண்மை. நெளிவு சுழிவுகளைக் கண்டு பிடிக்கும் ஆற்றல் மிக்கவர்கள் பெண்கள்.

**தோழமை உணர்வு**

பெண்கள் யாருடனும் சட்டென்று பழகிவிடமாட்டர்கள். ஆனால் பழகினால் அவர்களை போன்று யாராலும் இருக்க இயலாது. இது பெண்களுக்கு மட்டுமே உரித்தானது. பிறந்த வீட்டு உறவினர்களையும் புகுந்த வீட்டு உறவினர்களையும் சமமாகச் சமாளித்து வாழ்வியலை அழகாக்குவது இவர்களே.

**முடிவுரை**

இவ்வாறு இயற்கையும் விஞ்ஞானமும் சுற்றுப்புறச் சூழலும் பெண்களுக்கு தன்னிகரில்லாத ஆற்றலைத் தந்திருப்பதால்தான் பெண்களால் அனைத்துமாகி நிற்க முடிகிறது. வாழ்க்கையில் ஏற்படும் தடைகளைத் தாண்டிச் சாதிக்க முடிகிறது.

**த. பவித்ரா**

**இரண்டாமாண்டு - கணிப்பொறி அறிவியல் துறை - சி பிரிவு**

# பொதுவானவை

## அறிவியல் கருவிகளும் பயன்பாடுகளும்

❖ குரோனோ மீட்டர்- கடல் பயணத்தில் நேரத்தை துல்லியமாக அளக்க உதவும் கருவி

❖ பிக்மோ மானோ மீட்டர்- ரத்த அழுத்தத்தை அளக்க உதவும் கருவி

❖ டேக்கோ மீட்டர்- விமானங்களின் வேகம் அறிய உதவும் கருவி

❖ சோனோ மீட்டர்- கடலின் ஆழம் அறிய உதவும் கருவி

❖ கால்வனோ மீட்டர்- சிறு அளவு மின்னோட்டத்தை அளக்க உதவும் கருவி

❖ பைக்னோ மீட்டர்- திரவங்களின் அடர்த்தியை அளவிட உதவும் கருவி

**ரா. பிரீத்தி**

**இரண்டாமாண்டு - இளங்கலைத்தமிழிலக்கியம்**

## 2016-ன் சிறந்த வார்த்தை

உலகப் புகழ்பெற்ற ஆக்ஸ்போர்டு அகராதி 2016-ஆம் ஆண்டின் சிறந்த வார்த்தையாக Post-Truth எனும் வார்த்தையைத் தேர்ந்தெடுத்துள்ளது.

கடந்த 11-ஆண்டு காலமாக அந்தந்த ஆண்டின் சிறந்த வார்த்தையைத் தேர்ந்தெடுத்து வந்த ஆக்ஸ்போர்ட் அகராதி இந்த ஆண்டின் சர்வதேச வார்த்தையாகத் தேர்ந்தெடுத்துள்ள Post-Truth - எனும் வார்த்தைக்கு “பொது கருத்து என்பது உண்மைகளைக் கடந்தும் தனிப்பட்ட உணர்வுகள் மற்றும் நம்பிக்கைகளை சார்ந்து உருவாக்குவதில் அங்கம் வகிப்பது” என விளக்கம் கொடுத்துள்ளது.

சர்வதேச சிறந்த வார்த்தையைப் பொறுத்தவரையில் இந்த அகராதியின் பிரிட்டன், அமெரிக்க பதிப்புகள் சில நேரங்களில் வேறுவேறு வார்த்தைகளைத் தேர்ந்தெடுக்கும். ஆனால் 2016 - இல் இரு பதிப்புகளும் ஒரே வார்த்தையைத் தேர்ந்தெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**பா. பிரியதர்ஷினி**

**மூன்றாமாண்டு - இளங்கலைத்தமிழிலக்கியம்**

## உயிரியல்

- தலைகீழாக நடக்கின்ற உயிரினம் எது?

  விடை : **ஸ்லாத்**

- யானைக்கு நுகரும் நரம்புகள் எங்கு அமைந்துள்ளது?

  விடை : **வாய்**

- உலகில் எத்தனை வகை கொசுக்கள் உள்ளன?

  விடை : **48 வகைகள்**

- சிவப்பு, வெள்ளை கலந்த நிறமுடைய வியர்வையை வெளியிடும் விலங்கு எது?

  விடை : **காண்டாமிருகம்**

- வாழ்நாள் முழுவதும் தண்ணீர் குடிக்காத பாலூட்டி இனம் எது?

  விடை : **எலி, கங்காரு**

- உலகில் மொத்தம் எத்தனை வகைக் கிளிகள் உள்ளது?

  விடை : **316**

- பறவைகளில் மிக நீண்ட ஆயுளை உடையது எது?

  விடை : **ஆந்தை**

- கண்களுக்கு மேல் இமை இல்லாத உயிரினம் எது?

  விடை : **பாம்பு**

- கொம்பிலே கண்களை உடைய பிராணி எது?

  விடை : **நத்தை**

- கண்ணிலே காது உடைய பிராணி எது?

  விடை : **பாம்பு**

- வெள்ளை யானைகள் வாழும் நாடு எது?

  விடை : **தாய்லாந்து**

◆ உலகில் எத்தனை வகையான கரப்பான் பூச்சிகள் உள்ளன?

விடை : **3,500**

**ரா. மோகன ஜோதி**

**முதலாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

## தமிழறிவுப் பெட்டகம்

◆ அமலன் ஆதி பிரான் நூலைத் தந்தவர்

விடை : **திருப்பாணாழ்வார்**

◆ ஆதி உலா என்று அழைக்கப்படும் நூல் எது?

விடை : **திருக்கைலாய ஞான உலா**

◆ பட்டினத்தடிகளின் இயற்பெயர் யாது?

விடை : **திருவெண்காடர்**

◆ விப்ரநாராயணர் என்ற இயற்பெயர் உடையவர்?

விடை : **தொண்டரடிப்பொடியாழ்வார்**

◆ முருகப்பெருமானை வழிபடுவோர் எச்சமயத்தைச் சார்ந்தவர்கள்?

விடை : **கௌமாரம்**

◆ பாலறாவாயன் என்று சிறப்பிக்கப்பெறுபவர்?

விடை : **சம்பந்தர்**

◆ திருமாழிசையாழ்வாரின் சீடர் யார்?

விடை : **கணிக்கண்ணன்**

- திருநாளைப்போவார் என்று கூறப்பெறுபவர் யார்?

  விடை : **நந்தனார்**

- முல்லைப்பிராட்டி என்றழைக்கப்படுபவர் யார்?

  விடை : **ஆண்டாள்**

- தாயுமானவர் மனைவியின் பெயர் என்ன?

  விடை : **மட்டுவார் குழலி**

- பெருமாக்கோதையார் என்றழைக்கப்பட்டவர் யார்?

  விடை : **சேரமான் பெருமான் நாயனார்**

- மதுரகவியாழ்வார் படியது என்ன?

  விடை : **கண்ணியின் சிறுதாம்பு**

- சைவ சித்தாந்த சாத்திர நூல்களின் எண்ணிக்கை?

  விடை : **14**

- இராஜாக்கோவை என்று சிறப்பிக்கப்படுவது?

  விடை : **திருக்கோவையார்**

- அஷ்ட பிரபந்தம் எழுதியது யார்?

  விடை : **பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்**

**ம. சௌந்தர்யா**

**மூன்றாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

# பொது அறிவு

- 100 சதவீதம் மறுசுழற்சி செய்யப்படும் பொருள் எது?

  **விடை : கண்ணாடி**

- எந்த நாட்டில் பட்டுத்துணி முதன் முதலில் தயாரானது?

  **விடை : சீனா**

- இந்தியாவில் காற்றாலைகள் மூலம் அதிக அளவில் மின்னுற்பத்தி செய்யும் மாநிலம் எது?

  **விடை : தமிழ்நாடு**

- தாவரங்கள் எந்த முறையில் நீரை உறிஞ்சுகின்றன?

  **விடை :** நுண்புழைக் கவர்ச்சி

- தேசிய மூடுபனி மியூசியம் எங்கு அமைந்துள்ளது?

  **விடை : டார்ஜிலிங்**

- தேசிய கவி என்று அழைக்கப்பெறும் தமிழ்க்கவிஞர் யார்?

  **விடை : பாரதியார்**

- பிளாஸ்ட்டிக் எந்த நகரில் அறிமுகம் செய்யப்பட்டது?

  **விடை : லண்டன்**

- இந்தியாவின் தாவரவியல் தோட்டம் அமைந்துள்ளா இடம்?

  **விடை : கொல்கத்தா**

- ஒட்டகத்தை விட அதிக நாட்கள் நீரின்றி வாழ முடிந்த விலங்கினம் எது?

**விடை : கங்காரு, எலி**

- வைரஸ்களைப் பற்றிய அறிவியல் படிப்பு எது?

**விடை : வைராலஜி**

- உலகில் உள்ள நீரில் எத்தனை சதவீதம் இந்தியாவில் உள்ளது?

**விடை : நான்கு சதவீதம்**

- சதுப்பு நிலங்கள் எந்த வாயவை வெளியிடுகின்றன?

**விடை : மீத்தேன்**

- விண்வெளிக்கு முதன் முதலாகச் சென்ற நாயின் பெயர் என்ன?


**விடை : லைகா**

**ஆர். நிஷா**

**இரண்டாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

## பெண்மையைப் போற்றுவோம்

பெண்மையே மனிதனை ஆக்கும் தெய்வம்
பெண்மையே மனிதரில் வாழும் தெய்வம்
பெண்மையே மனிதனை ஆளும் தெய்வம்
பெண்மையே போற்றுவோம்
உண்மையை ஏற்ப்போம் !




by
P. Akila
B.sc physics -A


P. PAVITHRA
B.sc MATHS-I-A


III BA TAMIL